**திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: திரு எம்.ஜி.குழந்தைவேல், எம்.ஏ.,**

ந.க.எண்.ண4/38530/2014 நாள்: 15.12.2014

| | | |
|---|---|---|
| பொருள் | - | உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம்-2006- திருநெல்வேலி மாவட்டம்- அம்பாசமுத்திரம் வட்டம்- விக்கிரமசிங்கபுரம்- கலைசெல்வம் மற்றும் ஒருநபர் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம்-2006ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது- அபராதம் விதித்து ஆணையிடப்பட்டது- தொடர்பாக. |
| படிக்கப் பட்டவை | - | 1)விக்கிரமசிங்கபுரம், உணவுப் பாதுகாப்பு அலுவலரின் குற்றப்பத்திரிக்கை எண். 03/14, நாள்: 05.09.2014<br>2)பாளையங்கோட்டை, உணவுப்பகுப்பாய்வாளர் அறிக்கை நாள்: 26.08.2014<br>3)குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்கள் அளித்துள்ள வாக்குமூலங்கள் நாள்: 07.11.2014 மற்றும் 24.11.2014 |

--------------------

**உத்தரவு:**

விக்கிரமசிங்கபுரம், உணவுப் பாதுகாப்பு அலுவலர், 13.08.2014 அன்று விக்கிரமசிங்கபுரம் பகுதியில் ஆய்வுப்பணி மேற்கொண்ட பொழுது ராஜ் என்பவருக்கு சொந்தமான அன்னை காபி பாரிலிருந்து பொதுமக்களுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருளான பாலை விலைக்கு வாங்கி பகுப்பாய்வு செய்யப்பட்டதில் மேற்படி பால் தரம் குறைந்ததாக உள்ளது என பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் விக்கிரமசிங்கபுரம், உணவுப் பாதுகாப்பு அலுவலரால் குற்றப்பத்திரிக்கை (எண்.03/2014, நாள்: 5.9.14) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் விபரம்.

1) கலைசெல்வம், த/பெ. ராஜ் .. 1வது எதிரி

2) ராஜ், த/பெ. ஆறுமுகநாடார் .. 2வது எதிரி

இரண்டாவதாக படிக்கப்பட்ட பாளையங்கோட்டை, உணவு பகுப்பாய்வாளரின் அறிக்கையின்படி மேற்படி குற்றம் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம்-2006ன் கீழ்கண்ட விதிகளை மீறியதாகவுள்ளது.

1) Section (3) (1) (zx) 26(1), 26(2) (ii), 26(2) (v), 27 (3) (b) & 48(1)(a)

2) Regulation 2.1.1(1) of Food Safety and Standards (Food Products Standards & Food Additives) Regulation-2011.

மேற்படி குற்ற வழக்கு தொடர்பாக திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள் முன்பாக நேரில் ஆஜராகுமாறு குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை நாளன்று குற்றம்சாட்டப்பட்டவர்கள் திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள் முன்பு ஆஜராகி இவ்வழக்கில் வழக்கறிஞர் வைத்து வாதாட விரும்பவில்லை என்றும், வழக்கு தொடர்பாக அரசு எடுக்கும் முடிவிற்கு கட்டுப்படுவதாகவும் தங்களது குற்றத்தை ஒப்புக் கொண்டு வாக்குமூலங்கள் அளித்துள்ளனர். மேற்படி விசாரணையின்போது விக்கிரமசிங்கபுரம், உணவுப்பாதுகாப்பு அலுவலரும் உடனிருந்தார்.

இந்நேர்வு தொடர்பாக இரு எதிரிகளையும் விசாரணை செய்ததின் அடிப்படையிலும், இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையிலும், வழக்கு ஆவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும், அன்னை காபி பார் உரிமையாளர் ராஜ் மற்றும் விற்பனையாளர் கலைச்செல்வம் என்பவருக்கு தரம் குறைந்த பாலை பொது மக்களுக்கு விற்பனை செய்தது மற்றும் உணவுப் பொருள் பாதுகாப்பு

ஏற்பாடுகள் செய்யாததற்காக உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம்-2006 பிரிவு 50, 51, 55 மற்றும் 56ன்கீழ் விற்பனையாளர் கலைசெல்வம் மற்றும் உரிமையாளர் ராஜ் என்பவர்களுக்கு தலா ரூ.10000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்), அபராதமாக விதித்து உத்தரவிடப்படுகிறது. மேலும் மேற்படி அபராதத் தொகையை உடனடியாக Adjudicating Officer, Tirunelveli என்ற பெயரில் வங்கி வரைவோலைகளாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்திடவும் இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும்
கூடுதல் மாவட்ட நீதிபதி, திலி.

பெறுநர்

1) கலைசெல்வம், த/பெ.ராஜ், 19/12.அருணாசலபுரம் கீழத்தெரு,
விக்கிரமசிங்கபுரம்.

2) ராஜ், த/பெ.ஆறுமுகநாடார், 19/12.அருணாசலபுரம் கீழத்தெரு,
விக்கிரமசிங்கபுரம்.

3) உணவுப்பாதுகாப்பு அலுவலர், விக்கிரமசிங்கபுரம்.
.. மேற்படி குற்றம் சாட்டப்பட்ட நபர்களை நேரில் தொடர்புகொண்டு அபராதத் தொகையை வங்கி வரைவோலைகளாக செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும்.

நகல்: நியமன அலுவலர், உணவுப்பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, மருத்துவக்கல்லூரி வளாகம், பாளையங்கோட்டை.

நகல்: ண4.பிரிவு இருப்புக் கோப்பிற்கு.